12TH STD

**முன் மாதிரி முதல் இடைப் பருவத் தேர்வு --- 1**

**வணிகவியல்**

நேரம் : 1.15 மணி மதிப்பெண் : 45

**பகுதி ---- I**

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

1. மேலாண்மை என்பது ஒரு ------------
   அ) கலை ஆ) கலை மற்றும் அறிவியல் இ) அறிவியல் ஈ) கலை அல்லது அறிவியல்

2. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ---------- என்பர்
   அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

3. நம்பிக்கையற்ற ஊகவணிகர்கள் என்பவர் ------------
   அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

4. மூலதனச் சந்தை என்பது -------- க்கான ஒரு சந்தை ஆகும்
   அ) குறுகியகால நிதி ஆ) நடுத்தரகால நிதி இ) நீண்டகால நிதி ஈ) குறுகிய காலநிதி

5. செபியை நிர்வகிப்பவர்கள் அதன் ----------------
   அ) இயக்குநர்கள் ஆ) கூடுதல் இயக்குநர்கள் இ) இணை இயக்குநர்கள் ஈ) உறுப்பினர்கள்

6. பின்வருவனவற்றுள் சரிபார்ப்பு செயல்பாடு எது?
   அ) திட்டமிடுதல் ஆ) ஒழுங்கமைத்தல் இ) பணிக்கமர்த்துதல் ஈ) கட்டுப்படுத்துதல்

7. சரியானதை தேர்ந்தெடுக்கவும்
   அ. எதிலும் கெட்டதையே காண்கின்ற மனப்பாங்கு கொண்டவர், காளை ஊக வணிகர்
   ஆ. இந்தியாவில் உள்ள பங்கு சந்தைகளின் எண்ணிக்கை 25
   இ. ஆம்ஸ்டர்டாம் பங்குச் சந்தை உலகின் மிகப் பழைய பங்கு பரிவர்த்தனை நிலையமாக கருதப்படுகிறது
   ஈ. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்ட ஊக வணிகர் கரடி

8. PAN என்பதன் விரிவாக்கம் --------------- ஆகும்.
   அ) நிரந்தர தொகை எண் ஆ) முதன்மை கணக்கு எண்
   இ) நிரந்தர கணக்கு எண் ஈ) நிரந்தர கணக்கு வாரிசு எண்

9. தவறான இணை எது?
   அ) அரசுப்பத்திரம் ---- இந்திய ரிசர்வ் வங்கி
   ஆ) வைப்புச் சான்றிதழ் --- வனிக வங்கிகள்
   இ) கருவூல இரசீதுகள் ---- தொழில்துறை வங்கிகள்
   ஈ) பணச்சந்தை ----- பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள்

10. வேறுபட்ட ஒன்று எது?
    அ) தரகர்கள் ஆ) துணைத்தரகர்கள் இ) தன்வணிகர்கள் ஈ) ஊகவணிகர்கள்

## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. திட்டமிடுதல் என்றால் என்ன?
12. அதிகாரம் என்பதன் பொருள் தருக.
13. முக்கிய முடிவுப் பகுதிகள் ( Key Result Areas - KRA) என்பது என்ன?
14. OTCEI ( இந்திய உடனடி பங்கு மாற்றகம்) - சிறு குறிப்பு வரைக.
15. பங்குச் சந்தை என்றால் என்ன?
16. தேசிய தீர்வைகள் மற்றும் வைப்பு முறை ஏற்படுத்தப்பட்டதின் நோக்கம் யாது?

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4× 3 = 12

17. பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி? ( ஏதேனும் மூன்று)
18. மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. ( ஏதேனும் மூன்று )
19. பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை? (ஏதேனும் 6 )
20. டேலரின் மேலாண்மை தத்துவங்கள் யாவை?
21. பழமையான இரண்டு பணச்சந்தைகளை விவரி.
22. பரஸ்பர நிதி மூலம் முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. ஊக வணிகர்களின் வகைகள் யாவை? அவர்களைப் பற்றி விளக்கமாக குறிப்பிடுக

( அல்லது )

நவீன மேலாண்மைக் கோட்பாடுகள் விவரி (ஏதேனும் ஐந்து )

24. குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? (ஏதேனும் பத்து )

( அல்லது )

முதல் நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக

25. செபியின் அதிகாரங்களை விவரி

( அல்லது )

ஏதேனும் மூன்று நிதி நிறுவனங்களைப் பற்றி விளக்குக

7, 9 - இ,10- ஈ

12TH STD

## முன் மாதிரி முதல் இடைப் பருவத் தேர்வு --- 2

## வணிகவியல்

நேரம் : 1.15 மணி மதிப்பெண் : 45

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

1. கீழ்கண்டவர்களில் யாரால் மேலாண்மைக்கும், பணியாளர்களுக்கும் மிகச் சிறந்த ஒற்றுமை இருக்க வேண்டுமென வலியுறுத்துப்படுகின்றது?
   அ) டேலர் ஆ) போயல் இ) மேயோ ஈ) ஜேக்கப்

2. ஓராண்டு அல்லது அதற்கு குறைவாக நிதி கோருதலுக்கான நிதிச்சந்தை ------------- ஆகும்.
   அ) பத்திரச் சந்தை ஆ) பணச்சந்தை இ) மூலதனச் சந்தை ஈ) நிதிச் சந்தை

3. மூதனச் சந்தையின் பங்கேற்பாளர் -------------- ஆவர்.
   அ) தனிநபர் ஆ) நிறுமங்கள் இ) நிதி நிறுவனங்கள் ஈ) மேலே உள்ள அனைத்தும்

4. இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு பிணையம் எத்தனை முறை விற்கப்படலாம்?
   அ) ஒரே ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) மூன்று முறை ஈ) பலமுறை

5. சரியான கூற்று யாது?
   அ) செபி, பங்கு சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது.
   ஆ) செபி, பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடைசெய்வது இல்லை.
   இ) செபி, இந்திய அரசால் 1988 - ல் உருவாக்கப்பட்டு, சட்டமுறை அதிகாரம் வழங்கப்பட்டது.
   ஈ) செபிக்கு, ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் குறித்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க அதிகாரம் இல்லை.

6. வணிகமாற்றுச் சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை ---------- சந்தை என்று அழைக்கலாம்.
   அ) வணிகத்தாள் ஆ) கருவூல இரசீது இ) வணிக இரசீது ஈ) மூலதன

7. கூற்று ( A ) : நிதிச்சந்தையின் பல்வேறு கூறுகள் ஒரு நாட்டின் தொழிற்துறையின் துரிதவளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவி புரிகிறது.
   காரணம் (R) : சமுதாயத்தின் வாழ்க்கைதரம் மற்றும் நல்வாழ்வை நிதிச்சந்தை உயர்த்துகிறது
   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது சரியான விளக்கம் அல்ல.
   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது சரியான விளக்கம்
   இ) A சரி ஆனால் R தவறு
   ஈ) A தவறு ஆனால் R சரி

8. குறியிலக்கு மேலாண்மை செயற்முறையின் முதல் நிலை எது?
   அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது
   ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
   இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது
   ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

9. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ---------------

அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி இ) பாரதஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

10. கீழ்கண்டவற்றில் எது உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்?

அ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை

இ) தேசிய பங்குச் சந்தை ஈ) இலண்டன் பங்குச் சந்தை

## பகுதி - II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 16 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. மேலாண்மை என்றால் என்ன?
12. மேலாண்மையின் துணை செயல்பாடுகளை பட்டியலிடுக
13. முக்கிய முடிவுப் பகுதிகள் ( Key Result Areas - KRA) என்பது என்ன?
14. பரஸ்பர நிதி என்றால் என்ன?
15. குறியிலக்கு மேலாண்மைக்கு வரைவிலக்கணம் தருக.
16. ஒருங்கிணைத்தலின் பொருள் பற்றி நீங்கள் அறிவது என்ன?

## பகுதி - III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 22 -க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4× 3 = 12

17. மேலாண்மை கலையா? அறிவியலா?
18. செயலூக்கமளித்தலின் நன்மைகளை குறிப்பிடுக ( ஏதேனும் மூன்று )
19. மூலதனச் சந்தையின் ஏதேனும் மூன்று பணிகளை விளக்குக.
20. மறுவிற்பனை பத்திரங்களுக்கான சந்தை என்றால் என்ன?
21. செபியின் மூன்று நோக்கங்களை குறிப்பிடுக.
22. எக்காரணங்களுக்காக அரசுப்பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

23. நவீன மேலாண்மைக் கோட்பாடுகள் விவரி (ஏதேனும் ஐந்து )

( அல்லது )

வணிக இரசீதின் வகைகளை விவரி.

24. பணச்சந்தை மற்றும் மூலதனச்சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி.

( அல்லது )

குறிப்பு வரைக

1) துணிகர நிதி நிறுவனம் 2) பரஸ்பர நிதி 3) ஏட்டுக் கடன் தரகு முகமை நிறுவனங்கள்

25. செபியின் பணிகளை விவரி.

( அல்லது )

குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? (ஏதேனும் பத்து )

1,5,10 அ, 7 ஆ